**கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம் - 2017**

கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம் (கூட்டுத்தாபனம்) மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் (தொகுதி) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 12 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபன (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 6 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதிக் கூற்றுக்கள் தாமதிக்கப்பட்டமை காரணமாக கூட்டுத்தாபனத்துடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் மீதான அறிக்கை 2019 நவம்பர் 28 ஆந் திகதி மூன்று மொழிகளிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

**1.4 முனைப்பழி கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

**LKAS 16 :- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறைத்தெழுதிய ரூபா 590,999,051 பெறுமதியான கூட்டுத்தாபனத்தின் கட்டிடங்கள், குத்தகைக் காணிகளிலுள்ள கட்டிட மேம்பாடுகள், இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், கணனிகள் மற்றும் கணனி பாகங்களின் எஞ்சிய பெறுமதிகள் மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் என்பன மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முழுமையாகத் தேய்விடப்பட்டு தொடர்ந்தும் பயன்படுத்தி வரப்படுகின்ற கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 01 இயந்திரம், 69 வாகனங்கள், 80 அலுவலக உபகரணங்கள் மற்றும் 120 கணனிகள் மற்றும் அவற்றின் உப பாகங்களின் முன்கொண்டு செல் தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்ட ப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திடம் பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 4,143,032 பெறுமதியான கட்டிடப் பொருள் இருப்பு மீளாய்வாண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் இறுதி இருப்பாக காண்பிக்கப்பட்டிருக்காமையால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு மீதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் வங்கிக் கணக்கிற்கு கிடைத்திருந்த ரூபா 8,684,772 ஆன நேரடி வைப்புக்களை இனங்கண்டு உரிய கணக்குகளில் செலவு வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்காமையால் காசு மற்றும் காசுக்கு சமமானவை அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கம்பனியொன்றின் பங்கு மூலதன பங்களிப்புக்காக கூட்டுத்தாபனத்தினால் அக்கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள கட்டிடத்தின் பொருட்டு 2005 முதல் 2011 வரையான காலத்திற்கான திரட்டிய குத்தகை வாடகையான ரூபா 66,986,483 தொகையும் கம்பனியின் பாவனைக்காக கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் பெறுமதியான ரூபா 54,722,228 தொகையும் என்ற வகையில் மொத்தம் ரூபா 121,708,711 ஆனதோர் தொகை எதிரீடு செய்யப்பட்டிருந்தது. இந்தத் தொகையிலிருந்து மீளாய்வாண்டு வரை கூட்டுத்தாபனத்திற்கு பங்குகள் ஒதுக்கப்பட்டிருக்காத ரூபா ரூபா 98,909,871 தொகை நிதிக் கூற்றுக்களில் நீண்டகால முதலீட்டு முற்பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பெறுமதி தொடர்பில் குறித்த கம்பனியினால் இணக்கப்பாடு தெரிவிக்கப்படாததுடன், அந்தக் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் இது சம்பந்தமான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் தனியார் கம்பனி ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள கட்டிடம் என்பன அமைந்துள்ள காணியின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,415,000,000 ஆன போதிலும், அதன் பெறுமதி ரூபா 2,621,600,000 எனக் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளமையால் காணியினதும் முதலீட்டு ஆதனங்களினதும் பெறுமதி ரூபா 206,600,000 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

(உ) கூட்டுத்தாபனத்தின் 04 கட்டிடங்களினது மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,008,100 ஆன போதிலும், அவற்றின் பெறுமதி ரூபா 1,615,100 எனக் கணக்குகளில் பதிவு

செய்யப்பட்டுள்ளமையால் நிதிக் கூற்றுக்களிலுள்ள கட்டிடங்களின் பெறுமதி ரூபா 2,393,000 ஆல் குறைவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

(ஊ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கூட்டுத்தாபனத்திற்கு உரிமைத்துவம் கையளிக்கப்பட்டிருக்காத இறையாண்மை ஆதனத்தின் கீழுள்ள கட்டிடமொன்றை கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 12,600,000 தொகை கட்டிடங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) ரூபா 112,943,520 மீள்மதிப்பீட்டுப் பெறுமதியுடைய கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கட்டிடமொன்றை அபிவிருத்தி செய்வதுடன் தொடர்புடைய 15 விடயங்கள் ரூபா 68,868,000 என்பதாகக் கணக்குகளில் பதவிவு செய்யப்பட்டிருந்தமையால் கட்டிடங்கள் புனரமைத்தல் கணக்கின் மீதி ரூபா 44,075,520 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) வெளிவாரி தரப்பொன்றால் வர்த்தக நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்டு வந்திருந்த குறைத்தெழுதிய ரூபா 407,292 பெறுமதியுடைய கவனிப்பாரின்றி வைக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான டிமோ ரக லொறி வண்டி நிதிக் கூற்றுக்களில் வாகனங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கூட்டுத்தாபனத்தினால் குத்தகை வசதியின் கீழ் அரசாங்க வங்கியொன்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 99 வாகனங்கள் ஏலமிடப்பட்டிருந்தமையால் குறித்த வங்கிக்கு கிடைத்திருந்த பணத் தொகைக்கும் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகைக்கும் இடையே ரூபா 2,091,584 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாட்டை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தின் ஒன்றித்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் அதன் துணைக் கம்பனியான வ/ப சீடபிள்யூஈ இகொனொமிக் சென்டர்ஸ் (தனியார்) கம்பனியின் கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றுக்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 106,091,470 மிகையொன்றானதுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 504,948,375 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 611,039,845 ஆல் குறைவடைந்திருந்தது. கூட்டுத்தாபனத்தின் போக்குவரத்துப் பிரிவின் நட்டம் ரூபா 37,287,545 ஆல் குறைவடைந்தமை, ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட செயற்படுத்திய செயற்திட்டங்களிலிருந்து ரூபா 349,582,016 இலாபம் ஈட்டப்பட்டமை மற்றும் நிதிச் செலவினம் ரூபா 321,434,899 ஆல் குறைவடைந்தமை ஆகியன மேற்படி பற்றாக்குறை குறைவடைவதற்கு பங்களித்திருந்த பிரதான காரணங்களாகும்.

### 3.2 தொழிற்படு மூலதன நிலைமை

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் நடைமுறைச் சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 758,230,251 ஆகக் காணப்பட்டதுடன், அதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு அதன் சொத்துக்களைப் பயன்படுத்தி பொறுப்புக்களை எதிர்கொள்வதற்கான ஆற்றல் நிச்சயமற்றதாகக் காணப்பட்டது. ரூபா 7,687,816,732 தொகையான விசேட செயற்திட்டங்களிற்காக செலுத்தப்பட வேண்டிய காசு மற்றும் வங்கிக் கடன் மீதிகள் இந்த நிலைமைக்கு பங்களித்திருந்த பிரதான காரணங்களாகும்.

### 3.3 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மே 19 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.